சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

161. வசிஷ்டர் தோல்வி
(ராமாயண கீதை)

சுமித்திரை மாளிகையிலிருந்து சக்ரவர்த்தியின் அரண்மனையை நோக்கிச் செல்லும் ராம லட்சுமணரை வழியிலே சந்திக்கிறார் வசிஷ்டர். தசரதருடைய புலம்பலையும் பெருந்துயரையும், தமக்கு மரணம் நிச்சயமென்று அவர் கோசலையிடம் சொல்லி இடர்ப்பட்டதையும் கண்ட வசிஷ்டர் துக்கம் தேங்கிய நெஞ்சுடன் ராமனை நோக்கி விரைந்து வருகிறார். பிரிய சிஷ்யனைத் தம் உபதேசத்தால் காட்டுக்குப் போகாமல் செய்து சக்ரவர்த்தியின் உயிரைக் காப்பாற்றிவிடலாம் என்ற நம்பிக்கையோடு தான் வருகிறார்.

குருவைக் கண்டதும் பிள்ளைகள் வணங்குகிறார்கள். அவர்களைக் கண்டதுமே வசிஷ்டர் துன்பப் பெருங் கடலில் காலை விட்டு விட்டார் என்றுதான் சொல்லவேண்டும். ஆம், அப்படியே முழுகிப் போகத்தான்!


வசிஷ்டர் — ராமனைப் பார்க்க வந்தவர் — ராமனோடு லட்சுமணனையும் பார்த்துவிட்டார். அரையிலே மரவுரியைப் பார்த்தார். இப்போது அவர்களை உற்றுநோக்குகிறார். முகத்தினோடு அகத்தையும் நோக்கி, அவர்களுடைய நோக்கம் இன்னதென்பதை அறிந்துகொள்கிறார்.



அப்போது அந்தத் தவ உள்ளம்கூட எப்படித் தவிக்கிறது:

அன்னவர் முகத்தினோ(டு)
அகத்தை நோக்கினான்,
பொன்அரைச் சீரையின்
பொலிவு நோக்கினான்,
என் இனி உணர்த்துவ(து)
எடுத்த துன்பத்தால்
தன்னையும் உணர்ந்திலன்
உணரும் தன்மையான்

[அன்னவர் — அவர்கள். பொன் அரை — பொன்னாடை அணியும் அரையில். 'சீரை — மரவுரி. பொலிவு — (தனித்த) அழகு. என் இனி உணர்த்துவது — இனிச் சொல்லவேண்டியது என்ன இருக்கிறது. எடுத்த— பொங்கி வருகிற. தன்னையும் உணர்ந்திலன் — தன்னையும் மறந்தான். உணரும் தன்மையான்—(தன்னையும் தலைவனாகிய கடவுளையும்) உணரும் தன்மை வாய்ந்த ஞானியாகிய வசிஷ்டர்.]



துயரப் பெருங்கடலில் கால்வைத்த வசிஷ்டர் பொங்கி வரும் துன்ப அலைகள் தாக்கத் தம் வசம் அற்றவரானார்; தம்மை மறந்தார் சிறிது நேரம். பிறகு அவர் லட்சுமணனை மறந்துவிட்டு ராமனையே வைத்த கண் வாங்காமல் நோக்கி நோக்கி,

'வாழ்வினை நுதலிய
மங்க லத்துநாள்
தாழ்வினை அதுவரச்
சீரை சாத்தினான்!'

[வாழ்வினை — ராஜ வாழ்வை. நுதலிய — (இங்கே) நிச்சயித்த; (அதாவது, ராஜ வாழ்வு ஆரம்பமாகி விடும் என்று சோதிட சாஸ்திரம் நிச்சயித்திருந்த. மங்கலத்து நாள் — மங்களகாமாகிய நாளிலேயே. நாள் இங்கே முகூர்த்தம் என்றும் பொருள்படும். தாழ்வினை — தாழ்ந்து போகும் செய்கை. சீரை—மரவுரி.]

என்று உருகிப் போகிறார்.

"கிரீடம் தலையில் ஏறிவிடும், ராஜவாழ்வு வந்துவிடும் என்று சோதிட சாஸ்திரம் உறுதி கூறிய அதே முகூர்த்தத்திலே, இதைவிடத் தாழ்வு இல்லையென்று சொல்லும்படி ஆண்டியாக்கி மாவுரி அரையில் ஏறிவிட்டதே!" என்று பெரிதும் வருந்திய வசிஷ்டர், "இக்கொடிய வினை இவனுக்கு எவ்வாறு விளைந்தது?" என்று பேராச்சரிய மடைகிறார்.

இது கைகேயியால் விளைந்தது என்று எண்ணவும் வசிஷ்டர் மனம் இப்போது இடங் கொடுக்கவில்லை. முன்னே கைகேயியைப் பழித்தவர் இப்போது தமது தவத்தால் பண்பட்ட ஆழ்ந்து அகன்ற நுண்ணறிவால் வேறொரு ஊகம் செய்கிறார். கைகேயியை வியாஜமாகக் கொண்டு இந்தக் கொடிய வினை இவனுக்கு எப்படியோ விளைந்திருக்க வேண்டும் என்பதுதான் அந்த ஊகம். "எய்தவன் இருக்க அம்பை நொந்துகொள்ளலாமா?" அம்பை எய்தவன் யார் என்பதுதான் விளங்கவில்லை. ஆனால், இந்த ரகஸ்யம் பின்னே ஒரு வழியாக வெளிப்படும் என்று வசிஷ்டர் நம்புகிறார். ஆம், ராமாயணத்தின் அடிப்படையான தேவரகஸ்யம் பின்னால் வெளிப்பட்டுத்தானே கம்பன் இந்த ராமாவதார ரகஸ்யத்தைத் தன் காவியமெங்கும் குறிப்பாகவும் வெளிப்படையாகவும் வற்புறுத்துகிறான்?

"பொன்முடி சூடிப் பொன்னுடை தரித்துப் பொற்சிங்காதனத்தில் வீற்றிருக்க வேண்டியவன் இப்படியிருக்கிறானே! என்னே ஊழ்வினையின் சூழ்ச்சி!" என்ற ஆலோசனையில் தம்மையும் தாம் வந்த காரியத்தையும் மறந்திருந்த வசிஷ்டர் சிறிது நேரத்தில் கொஞ்சம் தைரியம் கொண்டு பேரன்புடன் ராமனை அணுகி, "குழந்தாய்! நீ காட்டுக்குப் போனால் சக்கரவர்த்தி வாழமாட்டார்; அவருக்கு உயிர் போய் விடும்" என்று முடிவான வார்த்தையைச் சுருக்கமாக உறுதியான குரலில் சொல்லுகிறார்.

இதற்கு ராமன் கூறும் விடை முனிவரை அப்படியே பிரமிக்கச் செய்து விடுகிறது:

"அன்னவன் பணிதலை
ஏந்தி ஆற்றுதல்
என்னது கடன், அவன்
இடரை நீக்குதல்
நின்னது கடன்" இது
நெறியும், என்றனன்:
பன்னகப் பாயலுள்
பள்ளி நீங்கினான்.

[அன்னவன் — தசரத சக்கரவர்த்தி. பணி — கட்டளை. தலை ஏந்தி — தலைமேல் தாங்கி. ஆற்றுதல் — ஒழுகுதல். என்னது கடன் — எனது கடமை. நின்னது — உனது. நெறி — நன்னெறி. பன்னகப் பாயல்—ஆதிசேஷனாகிய படுக்கை. பள்ளி—தூக்கம்; (இங்கே) அறிதுயில்.]

தந்தை இறந்து போவார் என்று சொல்லி ராமன் காட்டுக்குப் போவதைத் தடுக்கப் பார்த்த முனிவரை நோக்கி ராமன் கூறுவதைக் கேளுங்கள். ஒரு சேனாபதியின் உயிரைக் காப்பதைக் காட்டிலும் அவன் கட்டளையைத் தலைமேல் தாங்கித் தொண்டாற்றுவதுதான் படைவீரனது கடமை யென்று கூறுவதுண்டு. அப்படியே தந்தையும் தலைவருமாக இருக்கும் அரசர்பிரானது பணியைத் தலைமேல் ஏந்தி அதன்படி ஒழுகுவது தான் புதல்வனாகிய தன் கடமை என்று உண்மை-வீரனாகிய ராமன் சொல்லுகிறான். ஆனால், தசரதருடைய துன்பத்தை நீக்குதல் குருவான வசிஷ்ட முனிவர் கடமை என்பதையும் ஞாபகப் படுத்துகிறான்.

'ஆ, ராமாயணத்திலும் ஒரு கீதையா?' என்று ஆச்சரிய மடைகிறோம். அந்தக் கீதை, கண்ணனால் தனக்கு நண்பனாகவும் சீடனாகவும் இருந்த அர்ஜுனனுக்குப் பல சுலோகங்களால் உபதேசிக்கப் பெற்றது. இந்தக் கீதையோ மூன்றே அடிகளால் சிஷ்யன் குருவுக்கே உபதேசம் செய்வது!

கடைசியாகத் தத்துவ சாஸ்திர நிபுணர் கேவலம் ஒரு சட்ட நிபுணரைப் போல் விவகாரம் செய்து பார்க்கிறார். "அரசர் காட்டுக்குப் போ என்று உனக்குக் கட்டளையிடவில்லை; ஆராய்ந்து ஆலோசித்துப் பாராமல் கைகேயிக்கு இவ்வரங்களைக் கொடுப்பதாகச் சம்மதித்ததுண்டு. எனவே, சட்டப்படி நீ காட்டுக்குப் போக வேண்டியதில்லை!" என்பது வசிஷ்டர் வாதம். இதற்கு ராமன் சுலபமாக அளிக்கும் விடையைக் கேளுங்கள்.

"என்றனன் எந்தைஇவ்
 வரங்கள்; ஏவினாள்
ஈன்றவள்; யானது
 சென்னி ஏந்தினேன்;
சான்றென நின்றநீ
 தடுத்தியோ?" என்றான்.
தோன்றிய நல்லறம்
 நிறுத்தத் தோன்றினான்.

[என்றனன் — இசைந்தான்; சம்மதித்தான். எந்தை — என் தந்தை. ஈன்றவள் — பெற்ற தாய்போல் நான் மதிக்கும் கைகேயி. சென்னி — தலை. சான்று — சாட்சி. தடுத்தியோ — தடுப்பீரோ.]

"நீர் சொல்கிறபடி, என் தந்தை சம்மதித்து விட்டார். கட்டளையிட்டவரோ நான் பெற்ற தாயாகவே மதிக்கும் சிறிய தாயார். ஆகையால் பிதாவின் வாக்கியத்தைப் பரிபாலிப்பதோடு, மாதாவின் வாக்கியத்தைப் பரிபாலிக்கும் பாக்கியமும் எனக்குக் கிடைத்திருக்கிறது. எல்லாவற்றுக்கும் சாட்சியாக நிற்கும் நீர் இப்பொழுது தடுப்பீரோ?" என்று ராமன் சொன்னதும், வசிஷ்டர் பதில் ஒன்றும் சொல்ல மாட்டாதவராய்க் கண்ணீர் தாரையாகப் பெருக அப்படியே ஸ்தம்பித்து நிற்கிறார்.

உணர்ச்சிவசமான பெண்மையின் பிடிவாதத்திற்கு முன்னும், ஒப்பற்ற புத்திர சோகத்திற்கு முன்னும் தோல்வியடைந்த சாஸ்திர நுண்ணறிவு, இப்பொழுது தருமத்திற்கு உறுதி தேடும் கடமை யுணர்ச்சிக்கு முன்னும் தோல்வி யடைகிறது.

சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

162 ராமன் தோல்வி!

லட்சுமணனும் தன்னைப்போல் மாவுரி கட்டிக் கொண்டதைப் பார்த்து ராமன், "தம்பி! நீ அயோத்தியில்தான் இருக்க வேண்டும்" என்று சொன்னான். ஆனால் அப்படிச் சொல்லி லட்சுமணனைப் பிரிந்திருக்கும்படி வற்புறுத்துவது எவ்வளவோ கஷ்டமான காரியம் என்பது ராமனுக்குத் தெரியும்.

அண்ணன் கட்டளை

ஆகவே எத்தகைய பீடிகையோடு தன் விருப்பத்தை வெளியிடப் போகிறான் பாருங்கள்:

தான்புனை சிரையைத்
    தம்பி சாத்திட,
தேன்புனை தெரியலான்,
    செய்கை நோக்கினான் :
"வான்புனை இசையினாய் !
    மறுக்கி லாது, நீ
யான்புகல் இனையதோர்
    உறுதி கேள்" என—

[புனைசிரை—உடுத்துக்கொண்டது போன்ற மரவுரியாகிய உடையை. சாத்திட—உடுத்திக்கொள்ள. புனை—அழகாய்ப் பொருந்திய. தெரியலான்—மாலையணிந்த ராமன். வான்புனை— வானுலகத்தையும் அழகு செய்யத் தக்க. இசையினாய் — கீர்த்தியுள்ளவனே; பண்பு வாய்ந்தவனே. மறுக்கிலாது— மறுக்காமல். புகல் — சொல்வதாகிய. இனையதோர் உறுதி — இந்தச் சிறந்ததாகிய உறுதியான காரியத்தை. என—என்று சொல்லி.]



லட்சுமணனுடைய புகழையும் பண்பையும் பெரிதும் போற்றி, அப்பேர்ப்பட்டவன் தான் சொல்லக்கூடிய உறுதியான காரியத்தை மறுக்காமல் கேட்டுத்தான் ஆகவேண்டும் என்கிறான் ராமன். இனி ராமன் சொல்லும் அந்த உறுதியான வார்த்தையையும் கேட்போம் :

"அல்லையர் அனைவரும்
ஆழி வேந்தனும்
முன்னையர் அல்லர், வெந்
துயரின் மூழ்கினர்,
என்னையும் பிரிந்தனர்,
இடர்உ ருவகை
உன்னை நீ என்பொருட் (டு)
உதவுவாய்" என்றான்.

[ஆழி வேந்தன் — சக்ரவர்த்தி. முன்னையர் — முன் இருந்த நிலைமையர். வெந்துயரம் — கொடுமையான துன்பம். இடர் உருவகை — துன்பமுறாதபடி.]

"தம்பி! நம் தாய்மாரும் சக்ரவர்த்தியும் என்னைப் பிரிவதால் இனி முன் இருந்த நிலைமையில் இருக்க மாட்டார்கள். அவர்கள் உன்னையும் பிரிந்து துயருற வேண்டுமா? என்னைப் பிரிந்த தாய் தந்தையர் துயரத்தை நீ ஆற்றிக்கொண்டு அவர்களுக்குத் துணையாக இருக்க வேண்டும்" என்று சொல்லும் ராமன், "என் பொருட்டு நீ அப்படி உன்னை உதவ வேண்டும்" என்று வேண்டிக் கொள்கிறான்.

இவ்வளவு சாதுரியமாகவும் சிறந்த பண்புடனும் ராமன் பேசியபோதிலும், லட்சுமணனால் அந்த வார்த்தையைக்கேட்கவும் முடியவில்லை. அவன், தோள் நடுங்கத் திடுக்கிட்டுப் போகிறான்.

அண்ணனை மீறும் தம்பி

பிறகு, போன உயிர் மீண்டது என்று சொல்லும்படி ஒரே கலக்கமாய்க் கலங்கி நின்று, "இப்பொழுது அடியேன் உனக்குச் செய்த பிழை யாது?" என்று பொருமுகிறான் :

ஆண்தகை அம்மொழி
பகர, அன்பனும்
தூண்தரு திரள்புயம்
துளங்கத் துண்என,
மீண்டதோர் உயிர், இடை
விம்ம, விம்முவான்,
"ஈண் (டு) உனக் (கு) அடியனேன்
பிழைத்த(து) யா(து)?" என்றான்,

[ஆண்தகை—வீர ராமன். பகர—சொல்ல. தூண்தரு—தூணை ஒத்த. திரள்புயம்—திரண்ட தோள்கள். துளங்க—நடுங்க. துண்என—திடுக்கிட்டு. இடைவிம்ம—இடையிடையே கலங்கும்படி. விம்முவான்—விம்மி ஏங்கி அழுபவனாய். ஈண்டு — (இங்கே) இப்பிறப்பில். பிழைத்தது — பிழை செய்தது.]


ராமன் என்ன என்னவோ சொல்லித் தன்னை விலக்கப் பார்க்கிறான், பிரித்து விடப் பார்க்கிறான் என்ற ஒரே பயத்தினால் தோள் நடுங்கத் திக்பிரமை கொண்டு நிற்கும் லட்சுமணனை எவ்வளவு பிரத்தியட்சமாய்ப் பார்க்

கிறோம்! அப்படிச் சிறிது நேரம் நின்று, உயிரும் உணர்ச்சியும் மீண்டு வரக் குழந்தை போல் விம்மி அழும் தம்பியை ராமன் பார்த்துப் பரிவு கொள்வது போல், அவ்வளவு தெளிவாக நாமும் பார்த்து வியக்கிறோம், பாராட்டுகிறோம்.

அண்ணனை வென்ற தம்பி

இப்போது அவன் மேலும் பேசுகிறான்; விம்மி அழுதுகொண்டே பேசுகிறான்:

"நீர்உள எனின், உள
மீனும் நீலமும்;
பார்உள எனின், உள
யாவும் பார்ப்புறின்;
நார்உள தனுஉளாய்!
நானும் சீதையும்
ஆர்உளர் எனின்உளேம்?
அருளுவாய்" என்றான்.



நீர் நிலையை அழகு செய்வது நீலமலர் என்றால், அந்த நீரைத் தூய்மை செய்வது மீனல்லவா? அந்த நீலமலரைப் போல் இருக்கிறாளாம் சீதை; மீனைப் போல் இருக்கிறானும் லட்சுமணன். மீனுக்கும் நீலமலருக்கும் ஆதாரமான உயிர்நிலை ராமன் தானும். பொருள்களுக்கு ஆதாரம் நிலம் அல்லவா? ராமனும் ஆதார பூமியாக இருக்கிறானும் சீதைக்கும் லட்சுமணனுக்கும்.

இவ்விதமாகக் கேட்டுவிட்டு லட்சுமணன் கொஞ்சம் சும்மா இருக்கிறான். சில நிமிஷம் கழித்ததும் அந்தக் குரல் அப்

படித் தழுதழுத்து வாராமல் சிறிது கடுமையாகவே மீண்டும் ராமன் காதில் விழுகிறது.

"கேவலம் ஒரு பெண்ணின் வார்த்தையால் பொது ஜனங்களெல்லாம் நைந்து உடல் ஒடுங்கும்படி உன்னைக் காட்டுக்கு ஏவி விட்டுத் தான் பத்திரமாக அரண்மனையிலே பிழைத்திருந்து சத்தியத்தைக் காப்பாற்றுவதாகச் சொல்லிக் கொண்டு சுகமாயிருக்கும் அந்த அரசனுடைய மகன் தானே இவன் என்று எண்ணித்தானு, அண்ணு, என்னிடம் இந்த வார்த்தை சொன்னுய்?" என்று புண்பட்ட நெஞ்சோடு புலம்புகிருன் லட்சுமணன்.

மறுபடியும் உணர்ச்சி - மிகுதியால் தொடர்ந்து பேச முடியாமல் மீண்டும் மௌனமாகிருன். கடைசியாக லட்சுமணன்,

'செய்துடைச் செல்வமோ
யாதும் தீர்ந்(து), எமைக்
கைதுடைத்(து) ஏகவும்
கடவை யோஐயா?

[செய்துடை — அபிவிருத்தி செய்து உடைமையாகவுள்ள; எப்படியும் சம்பாதித்து வைத்துக் கொள்வதற்கு உரிய. எமை — எங்களை. கைதுடைத்து ஏகவும் — இவர்கள் வாசனை கூட உதவாது என்று கைவிட்டுப் போய் விடவும். கடவையோ — மனம் உனக்கு ஒருப்படுமோ.] என்று உள்ளுருகிப் புலம்புகிருன்.

"உனக்கு உரிய செல்வம் எல்லாவற்றையும் துறந்து போகும் நீ எங்களையும் கைவிட்டுப் போக வேண்டியது தான் கடமை யென்று நினைக்கிருயோ?" என்று தம்பி கேட்டதும் ராமன் மறுமொழி சொல்ல முடியாதவனுய், லட்சுமணன் முகத்தை உற்று நோக்குகிருன்.

நோக்கும்போதே அருள்நிறைந்த அம்மலர்க் கண்களில் நீர் நிறைந்து தாரை தாரையாக வழிகிறது. அந்தக் கண்ணீர், லட்சுமண கோபத்தை அநாயாசமாக ஜயித்த ராமனுக்குத் தோல்வியையும், லட்சுமணனது அன்பிற்கும் தியாக உணர்விற்கும் வெற்றியையும் எளிதாக அளித்து விடுகிறது.

சித்திர ராமாயணம்

163. ராமனைப் பிரியும் அயோத்தி

சக்ரவர்த்தி அரண்மனை முன்னே பட்டாபி-ஷேக மண்டபம் அமைந்திருந்தது. அங்கே வஸிஷ்டர் தெரிவித்த செய்தி, பட்டாபிஷேகத்தை எதிர்நோக்கிச் சபையாகக் கூடியிருந்தவர்களுக்கிடையே பெருந் துயரத்தையும் பெருங் குழப்பத்தையும் உண்டாக்கி விட்டது. மங்கல கீதம் அழுகுரலாயிற்று. மகிழ்ச்சியில் தழைத்துக் கொண்டிருந்தவர்கள்—'ஐயோ, சௌந்தரியத்திலே மலர்ந்த ஆனந்தகரமான முகமண்டலத்தையும், கருணை அலையெறியும் மோகனமான அக்கண்களையும் இனி எங்கே, எப்போது பார்க்கப் போகிறோம்?' என்று ஏங்கிக் கரைகாணாத துக்கத்திலே முழுகத் தொடங்கினார்கள். இந்நிலையில் அவர்கள் திடீரென்று ராமனைக் கண்முன் கண்டார்கள் என்றால், அது எவ்வளவு ஆச்சரியமான விஷயம்!

ஆம்; பட்டாபிஷேக மண்டபத்திற்கு எதிரே—உயர்ந்த மதில்களையுடைய அரண்மனையின் பொன்மயமான ஆசாரவாசலிலேயே — இராமனைப் பார்க்கிறார்கள். களங்கமில்லாத முகத்திலே பெரு மகிழ்ச்சி ததும்புகிறது. ஆனால் அம்முகத்தைக் கண்ட முனிவர்கள் அரசர்கள் முதலியோர் எப்படி மனம் வெந்து புழுங்குகிறார்கள்! அரையிலே மரவுரி; பின்னே, அதே உடையுடன் தொடரும் தம்பி. முடி சூடுங் கோலத்திற்காகத் தவித்தவர்கள் இக்கோலத்தைக் கண்டால் எவ்விதம் சகிப்பார்கள்?

தாய்மார் சோகம்

சிரிப்போடு விளங்கிய சுந்தர வதனங்களெல்லாம் கண்ணீரால் மறைக்கப் படுகின்றன. சக்ரவர்த்தியின் தேவியர்களெல்லாம் பரிதவித்[து] அழுதுகொண்டே அர[...]



மனையி லிருந்து வெளிப்படுகிறார்கள். அவர்கள் கீழே விழுந்து வருந்தி அழுவதைப் பாருங்கள். அந்தப் பெண்களுடைய வித விதமான அழகும், சாயலும், அழுகையும் அப்படியே பிரத்தியட்ச மாகின்றன :

கன்னி நன் மயில்களும்,
குயில் கணங்களும்,
அன்னமும், சிறை யிழந்(து)
அவனி சேர்ந்தன
என்ன, விழ்ந்(து) உழந்தனர்,
இராமன் அல்லது
மன்னுயிர்ப் புதல்வரை
மற்றும் பெற்றிலார் !

[கன்னி—இளமை. கணம்—கூட்டம். சிறை—சிறகு, அவனி—பூமி. உழந்தனர் — வருந்தினார்கள். மன்னுயிர்ப் புதல்வர் — உயிர் வாழ்க்கைக்குத் தாரகமான பிள்ளைகள்.]



இத் தாய்மார்களோடு வேறு உறவினர்களும் அரண்மனையைச் சார்ந்தவர்களும் பெரும் துக்கத்தோடும் கவலையோடும் வாசலும் முற்றமும் மறைய மொய்த்துக் கொள்கிறார்கள். முடிசூட வேண்டுமென்று ரத்தினங்கள் இழைத்த தங்க ரதத்தில் பவனி போன சக்ரவர்த்தி மகன், இப்பொழுது ஜடை புனைந்து மரவுரி சுற்றி அதே ராஜ வீதியில் நடந்து போவதைக் கண்டவர்கள் என்ன பாடு பட்டிருக்க வேண்டும் !

நல்நெடு நளிர்முடி
சூட, நன்மணிப்
பொன்நெடுந் தேரொடும்
பவனி போனவன்,
துன்நெடுஞ் சீரையும்
சுற்றி மீண்டும்அப்
பொன்நெடும் தெருவிடைப்
போதல் மேயினான்.

[நளிர் — பெருமை. துன்நெடுஞ்சீரை — நார் நெருங்கிய மாவுரி. பொன்நெடும் தெருவிடை — அழகிய ராஜ வீதியில். போதல் மேயினான் — போனான்.]

கண்ணீரும் கம்பலையும்

இந்தக் காட்சியைப் பார்த்த மக்கள், "ஐயோ! இந்த அழகனையும் இப்படி வஞ்சிக்கலாமா? இதைக் கண்டும் நம் நெஞ்சு பிளந்து போகாமல் கற்பாறைபோல் இருக்கிறதே!" என்று பிரலாபிக்கிறார்கள். உல்லாச மாகக் கூந்தலுக்கு அகிற்புகை ஊட்டிக்கொண்டிருந்த சில பெண்மணி கள் மையுண்ட கண்களால் உபரிகையிலுள்ள வேலைப்பாடமைந்த சாளரங் களின் வழியாக ராமனைப் பார்த்துக் கூட்டில் இருந்து அழும் கிளிகளைப் போல் புலம்புகிறார்கள். ராமன் ராஜ வீதியில் போய்க் கொண்டே இருக் கிறான். அவனைத் தொடர்ந்து செல்லும் கூட்டம் மேன்மேலும் பெருகிக் கொண்டே போகிறது. அவர்கள் கண்ணீரும் கம்பலையுமாகப் பேசிக் கொள்ளும் சில வார்த்தைகளையும் நமது காதில் விழச் செய்து விடுகிறது கவிஞனது 'செஞ்சொற் கவியின்பம்' என்ற மந்திர சக்தி :

'முழுவதே பிறந்(து)உல(கு)
உடைய மொய்ம்பினோன்,
உழுவைசேர் கானகத்(து)
உறைவென் யான்என,
எழுவதே! எழுதல்கண்(டு)
இருப்பதே! இருந்(து)
அழுவதே! அழகி(து)இவ்
அன்(பு)!' என் றார்சிலர்.

[மொய்ம்பினோன் — வலிமை பொருந்தியவன். உழுவை — புலி.]

"மூத்தவனாகப் பிறந்து ராஜ்யம் முழுவதையும் தனதாக்கும் உரிமை யோடு வலிமையும் வாய்ந்தவன், 'கடும்புலிகளோடு மற்றைக் கொடிய மிரு கங்களும் வசிக்கும் காட்டில் நானும் வசிப்பேன்!' என்று புறப்படுவதா? அவ்வாறு எழுவதைக் கண்டும் நாம் இருப்பதா? இருந்து அழுவதா? இந்த அன்பு எவ்வளவு அழகாக இருக்கிறது!" என்று தம்மைத் தாமே நொந்துகொண்டு சிலர் பேசுகிறார்கள்.

மரண வேதனை

பல பிள்ளைகளையுடையவரும், அந்தப் பிள்ளைகளில் ஒரு குருட்டுப் பிள்ளை, ஒரு செவிட்டுப் பிள்ளை, ஒரு ஊமைப் பிள்ளைக்காகத் தம் உயிரையும் கொடுக்கக் காண்கிறோமே! இப்படிப்பட்ட உலகத்திலே,

> முறைமகன் வனம்புக,
> மொழியைக் காக்கின்ற
> இறைமகன் திருமனம்
> இரும்(பு)என் றார்சிலர்.

குருடாகப் பிறப்பதை ஒருவரும் விரும்ப வில்லை. பிறவிக் குருடர் சூரிய வெளிச்சத்தைக் கண்டு இன்புறக் கூடுமா? பல நிறங்கொண்ட இயற்கை அழகுகளைக் கண்டு மகிழ்ச்சி அடையக் கூடுமா? அவர்களுடைய உலகம் இருள் மயமான உலகம். எனவே, அவர்களைக் குறித்து நாம் பெரிதும் இரங்குகிறோம். ஆனல் அயோத்திவாசிகளில் சிலர் குருடர் மீது பொறாமை கொள்கிறார்கள்! "இந் நாட்டிலே கண்ணோடு பிறப்பது தான் பாக்கியக் குறைவு; கண்ணில்லாமல் பிறப்பவரே பாக்கியசாலிகள்!" என்கிறார்கள்.

எங்கே பார்த்தாலும் அழுகை, தளர்ச்சி! எங்கும் மலர் துறந்த கூந்தல், ஒளி களை இழந்த முகம்! பச்சைக் குழந்தைகளையும் எடுத்து விட மறந்ததாய்மார்...... ராமனைப் பிரியும் அயோத்தி உயிரைப் பிரியும் உடல் போல் மரணவேதனை அனுபவிக்கிறது.

சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.


164. அழகும் பயங்கரமும்

என்ன அழகு, என்ன அடக்கம்! ஆ! ஏன் இந்த நடுக்கம் இப்போது? பளிச்சென்று உள்ளம் நடுங்கி உடம்பும் நடுங்குகிறது. மின்னற்கொடி போல விளங்கும் பெண்ணரசி இதோ மின்னலைப் போலத் துடிக்கிறாள்!

அரசா, ஆண்டியா?

திருந்த அணிகளால் தன்னை அலங்கரித்துக் கொண்டு சித்திரப்பாவை போல் இருக்கும் இவள் பெருமகிழ்ச்சிக்கு உரிய நிகழ்ச்சி ஒன்றை அமைதியாக எதிர்நோக்கியிருந்தாள். திடீரென்று அமங்கலமான அழுகுரல்கள் காதில் விழுகின்றன. எதிர்பாராத விபரீதக் காட்சியொன்று கண்ணெதிரே வருகிறது.

அழுது, தாயரொ(டு)
அருந்தவர் அந்தணர்
அரசர்
புழுதி ஆடிய
மெய்யினர், புடைவந்து
பொருமப்,
பழுது சீரையின்
உடையினன் வரும்படி
பாரா,
எழுது பாவைஅன் —
னாள்மனத் துணுக்க
மொ(டு) எழுந்தாள்.



[அருந்தவர் —மகரிஷிகள். புழுதி ஆடிய—புழுதி படிந்த. மெய்யினர் —உடம்பை உடையவர். புடைவந்து பொரும — பக்கத்தில் வந்து விம்ம. பழுது

சீரை — (அரசனுக்கு) ஒத்திராத மரவுரி. வரும்படிபார — வரும் விதத்தைப் பார்த்து. எழுதுபாவை அன்னாள் — அருமையாகச் செய்த சித்திரப்பாவை போன்ற சீதை. துணுக்கம் — நடுக்கம்.]

ஒரு புறம் தாய்மார், ஒரு புறம் முனிவர்கள், அரசர்கள் ஆதியர். இப்படி ஏன் இவர்கள் புழுதியில் புரண்டு எழுந்தவர்களைப் போல் காணப்படுகிறார்கள்? இப்படி ஏன் பொருமிக் கொண்டு வருகிறார்கள்? இவர்களுக்கிடையே — என்ன கொடுமை! — அரசர் கோனாக வாழ வேண்டியவன் ஆண்டிபோல் உடுத்து, வருகிறான்! இவனையே உயிராகக் கொண்டு வாழும் அயோத்திமா நகரம் அப்படியே மயங்கி ஏங்கி நிலை குலைந்து மரண வேதனை அனுபவித்துக் கொண்டு இவனை விடாது தொடர்ந்து வருகிறது.

தன் அரண்மனை முன்வாசலில் உட்கார்ந்து கொண்டிருந்த சீதை, மேலே சொன்ன கோரமான நிலையில் நாயகன் தன்னை நோக்கி வருவதைப் பார்க்கிறாள். பார்த்துத் திடுக்கிட்டுத் திக்பிரமை கொண்டு எழுந்திருக்கிறாள். நடுங்கிக் கொண்டே ராமனை நோக்கி "நடந்தது என்ன?" என்று பரபரப்பாய்க் கேட்கிறாள்.

"என்னை உற்ற(து)?
இயம்பெ"ன்(று) இயம்பினாள்:
மின்னை உற்ற
நடுக்கத்து மேனியாள்,

[என்னை உற்றது — என்ன நேர்ந்தது. மின்னை உற்ற நடுக்கத்து — மின்னல் நடுங்குகிற மாதிரி நடுங்கிக் கொண்டிருந்த.]

அடுத்த ரயிலில்?

அப்போது அவன் தனது ஆருயிர்க் காதலிக்கு எவ்வளவு பக்குவமாய்ச் செய்தி தெரிவிக்கிறான்:

"பொருவில் எம்பி
புவிபுரப் பான்; புகல்
இருவர் ஆணையும்
ஏந்தினென், இன்றுபோய்,
கருவி மாமழைக்
கல்தடம் கண்டு, நான்
வருவென் ஈண்டு,—
வருந்தலை நீ" என்றான்.

[பொருவில் - ஒப்பற்ற. எம்பி - தம்பி பரதன். புவி புரப்பான் - ராஜ்யம் ஆள்வான். புகல் இருவர் - தஞ்சமாகிய தாய் தந்தையர். கருவி மாமழைக் கல் தடம் - மழை கொட்டுவதற்குக் கருவியாகிய மலைக்காடு. வருந்தலை - வருந்த வேண்டாம்.]

சீதை கேட்டதற்கு ராமன், "என் அருமைத் தம்பி பரதன் ராஜ்யம் ஆளப் போகிறான்" என்று பதில் சொல்லத் தொடங்குகிறான். அச்செய்தியை முதலில் தெரிவித்து விட்டுத் தான் வனவாசம் செய்யப்போவதை,

"தாய் தந்தையாது ஆணையைத் தாங்கினேன்" என்ற பீடிகையோடு மெள்ள வெளியிடத் தொடங்குகிறான். "அந்த ஆணைக்கு இணங்க நான் இன்று போய், மேகம் தங்கும் மலையோடு கூடிய காட்டைக் கண்டு வருவேன்!" என்று கூறுவது, இன்று போய்க் குற்றால மலைவளம் கண்டு (ரயிலில்) திரும்பி வருவேனென்று ஒருவன் சொல்வதை நினைப்பூட்டுகிறதல்லவா?

எவ்வளவு காலம் வனவாசம் செய்யவேண்டியிருக்கும் என்று சொல்லாமலே சாதுரியமாகச் செய்தி தெரிவித்து, "இங்கே நீ வருந்தாமல் இரு" என்று ராமன் வேண்டிக் கொள்கிறான். தான் அவளைப் பிரிந்து எவ்வளவு துன்பம் அடைய நேர்ந்தபோதிலும், அவள் தன்னைப் பிரிந்த பின்பு வருந்தலாகாது என்ற ஒரே கவலை தான் இப்போது காதலனுள்ளத்தில் இடம் பெற்றிருக்கிறது. சீதையும் தன்னைத் தொடர்ந்து காட்டுக்கு வந்து துன்பம் அடையக்கூடும் என்ற எண்ணம் காதல் நிறைந்த ராமன் உள்ளத்தில் உதிக்கவேயில்லை.



வருத்தத்திலும் பங்கு!

சீதை வினவும் ராமன் விடையும் இச் சம்பாஷணையின் முதல் வார்த்தையாக அமைகின்றன. இப்போது சீதையின் மன நிலையை நோக்குவோம். அவளுக்கோ ராஜ்யம் இழந்தது கவலை தாவில்லை; காட்டுக்குப் போவதுகூடச் சிறிதும் கவலை தாவில்லை. தாய் தந்தையாது வாக்கைக் காப்பாற்றத் துணிந்தது சம்மதந்தான். ஆனால்,

நாய கன்வனம்
நண்ணல்உற் ருன்என்றும்,
மேய மண் இழந்
தான்என்றும், 'விம்மலள் ;—
'நீவ ருந்தலை,
நீங்குவென் யான்'என்ற
தீய வெஞ்சொல்
செவிசுடத் தேம்புவாள்.

[நண்ணல் உற்ருன் — போகத் தொடங்கினுன். மேய — மேவிய, தன்னை அடைந்த. விம்மலள் — வருந்தவில்லை. வெஞ்சொல் — கொடிய சொல். தேம்புவாள் — தேம்பித் தேம்பி அழுகிருள்.]

"என் வருத்தத்திலும் வாழ்க்கைத் துணையாகிய உனக்குப் பங்கு உண்டு" என்று சொல்லாமல், "நீ வருந்தாமல் இரு ; நான் போவேன் !" என்று சொன்னது தான் சீதையின் செவியைச் சுடுகிறது; அவளைத் தேம்பித் தேம்பி அழச் செய்கிறது. "என்ன வார்த்தை சொல்லிவிட்டார் ? தீமையும் கொடுமையும் நிறைந்த வார்த்தை !" என்று நினைக்கிருள்.

குற்ருலமா, ஸஹாராவா ?

சீதையின் தன்மையை அறிந்துகொண்ட ராமன், காட்டின் பயங்கர நிலையை அவள் கண்முன் சித்திரித்துக் காட்டுகிருன். தான் மட்டும் போவ தாகச் சீதையிடம் கூறும்போது, காடு மேக சஞ்சாரத்தோடு வளமும் வனப்பும் வாய்ந்து செழித்து விளங்கும் குளிர்ந்த குற்ருலம் அல்லது கொடைக்கானல் ஆக இருக்கிறது ! இப்போது சீதையும் உடன் வர எண்ணியபோது அதே காடு எவ்வளவு வெப்பமும் கொடுமையும் வாய்ந்த ஸஹாரா ஆக மாறிவிடுகிறது, பாருங்கள் :

"வல்அ ரக்கரின்
மால்வரை போய்விழுந்(து)
அல்அ ரக்கின்
உருக்கழல் காட்(டு)அயல்
கல்அ ரக்கும்
கடுமைய அல்ல,நின்
சில்அ ரக்குண்ட
சேவடிப் போ(து) !" என்ருன்

[வல் — கொடிய. அரக்கரின் — அரக்கர் போல. மால்வரை — பெரிய மலை. அல் — இரவு. அரக்கின் உருக்கு அழல் — அரக்கை உருக்கினது போல எரிந்து கொண்டிருக்கும் வெப்பம். காட்டு அயல் — காட்டுப் பக்கத்தில் உள்ள. அரக்கும் — அழுத்தும். கடுமைய — கடுமை உடையன. சில் அரக்கு உண்ட — குளிர்ந்த செம்பஞ்சுக் குழம்பு ஊட்டிய. சேவடிப் போது — சிவந்த அடிகளாகிய தாமரை.]

சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

165. சோக சிகரம்

"கொடிய அரக்கர்கள் போய்ப் படுத்துக் கிடப்பது போலப் பெரிய மலைகள் போய் விழுந்து கிடக்கும்! (அவை இரவில் எவ்வளவு பயங்கரமா யிருக்கும் என்பதை ஊகித்துக் கொள்ளலாம்.) பகலில் அங்கே வீசும் வெயில் இரவிலுங்கூட எரிந்து கொண்டிருக்கிறதோ என்று பிரமிக்கும்படி அவ்வளவு கொடிய உஷ்ணமா யிருக்கும். காதலியே! அப்படிப்பட்ட காடுகளிலுள்ள கற்களை மிதித்துச் செல்லும்படி அவ்வளவு கடுமையானவை யல்லவே, அழகும் மென்மையும் வாய்ந்த உன் அடி மலர்கள்!" என்று காதலன் சொல்லுகிறான்.

காடு சுடுமோ?

ஆனால் சீதை இந்தத் திறந்த உள்ளத்தைப் பார்க்கவில்லை; பார்க்க மறுக்கிறாள் என்றே சொல்ல வேண்டும். "அம்மம்ம! பேச்சில்தான் என்ன அன்பு! எவ்வளவு கருணை! இதயமோ என்றால், ஈரமில்லாத பாலை நிலம் தான்!" என்று பதில் சொல்லத் தொடங்குகிறாள்:



"பரி(வு)இ கந்த
மனத்(து)ஒரு
பற்றிலா(து),
ஒருவு கின்றனை;
ஊழிஅ ருக்கனும்
எரியும் என்ப(து)
யாண்டைய(து)?
ஈண்டுநின்
பிரிவி னும்சுடு
மோ, பெருங்
கா(டு)?" என்றாள்:

[பரிவு — அன்பு, இரக்கம். இகந்த — பிரிந்த. ஒருவுகின்றனை — விட்டு நீங்குகிறாய். ஊழி அருக்கன் — யுகாந்த காலத்துச் சூரியன். யாண்டையது — எத் தன்மையது.]

காதலன் காட்டை வருணித்துப் பயங்காட்டுவதும், காதலி அலட்சியமாகப் 'பிரிவினும் சுடுமோ பெருங்காடு?' என்று கேள்வி போடுவதும், நாயக - நாயகி சம்பாஷணையின் 'இரண்டாவது வார்த்தை' யாகும்.

கடல்! கடல்!

சீதையின் வார்த்தையைக் கேட்ட இராமன் அவள் உள்ளத்திலே பொங்கிக் கொண்டிருந்த கருத்தையும் உணர்ந்து கொண்டான். ஏதோ ஒரு சிறு துவாரத்தின் வழியாக, பொங்கிக் குமுறிச் சுழன்று அலை பாய்ந்து கொண்டிருக்கும் சமுத்திரத்தைப் பார்ப்பது போல், ராமன் சீதை உள்ளத்திலே அலை அலையாகப் பொங்கிப் பெருகிக் கொண்டிருக்கும் கரை காணாத சோகக் கடலைப் பார்த்து விடுகிறான், அவள் சொன்ன சிறு வார்த்தை மூலமாக :



அண்ணல் அன்னசொல்
கேட்டனன், அன்றியும்
உள்நி வந்த
கருத்தும் உணர்ந்தனன்;
கண்ணின் நீர்க்கடல்,
கைவிட நேர்கிலன்,
எண்ணு கின்றனன், —
என்செயற் பாற்றெனா.

[அண்ணல் — ராமன். அன்ன சொல் — அந்தச் சொல். உள் நிவந்த — உள்ளத்திலே பொங்கியெழுந்த. கைவிட — பெருக்க; கொட்டிவிட. நேர்கிலன் - இசையாதவனாய். என் செயல் பாற்று எனா — என்ன செய்கிறது என்று.]

ராமன் உள்ளத்திலும் சோகம்

பொங்குகிறது. அப்படியே கண்ணீராகக் கொட்டிவிட வேண்டுமென்று தோன்றுகிறது. அப்படிக் கொட்டியிருந்தால் அதுவும் ஒரு கடலாகப் பெருகி விடும் என்று தோன்றுகிறது. ஆனால் அவன் சீதை முன் அப்படிச் செய்ய இசையவில்லை. எப்படியோ சோகக் கடலை உள்ளத்திலும், கண்ணீர்க் கடலைக் கண்களிலும் வெளிப்படாது நிறுத்திக் கொண்டு, "இனி என்ன செய்யலாம்?" என்ற சிந்தனைக் கடலில் மூழ்கிப் போனான்.

தந்திரமும் வெற்றியும்

'இதுதான் சமயம்' என்று கருதும் சீதை, விசாலமான தன் அரண்மனைக்குள்ளே புகுந்து காட்சிச் சாலைபோல் தோன்றும் ஓர் அறைக்குப் போகிறாள். அங்கே விநோத விநோதமான பல பொருள்களுக்கிடையே, அநாகரிகமான காட்டு மனிதர்கள் ஆடையாகக் கொள்ளும் மரவுரிகள் வைக்கப்பட்டிருக்கின்றன. அந்த மரப்பட்டை வகைகளில், தான் கட்டிக் கொள்ளக்கூடும் என்று தேர்ந்தெடுத்து அம் மரவுரியைத் துணிந்து உடுத்திக் கொள்கிறாள். பிறகு, தன்னை மறந்திருந்த நாயகனுக்குப் பின்னாக மெள்ள வந்து, பக்கத்தில் நிற்கிறாள். மறுக்ஷணம் நாயகனது நீண்ட கையைப் பற்றிக் கொள்கிறாள்.

அப்போது தான் ராமன், உணர்ச்சி வந்து சீதையை நோக்குகிறான். அவள் வெற்றி தோன்றப் புன்னகை புரிந்து கொண்டிருப்பதைப் பார்க்கிறான் :

முல்லையும் கடல்
முத்தும் எதிர்ப்பினும்,
வெல்லும் வெண்ணகை —
யாய் !விளை(வு) உன்னுவாய்
அல்லை ! போத
அமைந்தனை ; ஆதலின்
எல்லை அற்ற
இடர்தரு வாய் !" என்றான்.

[முல்லை — முல்லை மலர். வெண்நகையாய் — வெண்ணிறமான பல் வரிசை சிறிது தோன்றுமாறு புன்னகை புரிகிறவளே. உன்னுவாய் அல்லை — நினைத்துப் பார்க்கவில்லை. போத — வர. அமைந்தனை — தயாராகி விட்டாய்.]

"எல்லை அற்ற இடர் தருவாய் !" என்ற ராமன் வார்த்தை, பின்னால் விளையப் போகும் துன்பப் பெருங்கதைக்கு ஒருமுற்குறியாக வந்து விழுகிறது. இந்த வார்த்தை கேட்டது தான் தாமதம், சீதை "உனக்குத்



துன்பமெல்லாம் இது ஒன்றுதான்; என்னையும் துறந்த பின்பு இன்பம் தானே?" என்று சீறுகிறாள்.

குயிலை வென்ற குரலினிமையோடும், குழந்தையின் மழலை போன்ற இனிய மென் சொற்களோடும் வெளிப்பட்ட அக் கோப வார்த்தைக்கு ராமன் பதில் சொல்லத் துணியவேயில்லை.

இப்படி இவர்கள் பேசிக் கொண்டது சம்பாஷணையின் மூன்றாவது வார்த்தை. சீதாராமர்களின் சம்பாஷணை இந்த மூன்றே வார்த்தைகளோடு முற்றுப் பெறுகின்றது. இந்தச் சித்திரத்தின் பெரும் பகுதியும் உணர்ச்சியை வெளியிடும் மௌனத்தாலும் செயல்களாலும் உருவாக்கப் பெறுகின்றது.

காதலின் வெற்றி

'சீதை ராமனைப் பிரிந்து இருக்க மாட்டாள், அவனைத் தொடர்ந்து காட்டுக்குப் போவாள்' என்பது தசரதர், சுமித்திரை, வசிஷ்டர், சுமந்திரன் முதலானவர்களுக்கும் பொது மக்களுக்கும் தெரியும். பகைமையுணர்ச்சி கொண்ட கூனி கைகேயிகளுக்கும் நன்றாகத் தெரியும். எனினும் இவ்வளவு தெளிவான விஷயம் ராமனுக்குமட்டும் தெரியவில்லை. ஏன்? காதல் மிகுதியால் ராமன், சீதை வருந்தக் கூடும் என்பதை நினைக்கவும் துணியவில்லை. இத்தகைய ராமன் காதலையும் சீதை காதல் வென்று விடுகிறது.

சீதையின் கடைசி வார்த்தை, ராமனை மௌனமாக்கி விடுகிறது. அப்படியே தெருவுக்கு வந்துவிடுகிறான். ராஜ வீதி வழியாகப் புறப்படுகிறான். அந்தப் பெரிய வீதியில் ஆண்களும் பெண்களும் விழுந்து அழுது கொண்டிருக்கிறார்கள். அவர்களை மிதித்து விடாமல், ஒரு வகையாக விலக்கி வழி பிடித்துப் போகிறார்கள் சீதா ராமர்கள், இளையவனுடன்.

லட்சுமணன் வில்லும் கையுமாக முன்னே போகிறான்; சீதை பின்னே போகிறாள்; இடையே ராமன் போவதைப் பார்க்கிறோம். ஆனால் மரவுரியை எப்படியோ சுற்றிக் கட்டிக்கொண்டு மகா லட்சுமிபோலப் பின்னே செல்லும் சீதையின் பரிபூர்ண அழகும் பரிதாப நிலையும் நமது கவனத்தை முதன் முதல் வசீகரிக்கிறது.

ராமன் தாய்மார்கள் தொடரத் தசரதனது அரண்மனை வாயிலைச் சமீபிக்கிறான். இப்பொழுதும் உள்ளே சென்று அவரிடம் விடை பெற்றுக் கொள்ள மனம் துணியவில்லை. உடனே தாய்மாரைக் கும்பிட்டு, "வயது முதிர்ந்த சக்ரவர்த்தியை நீங்கள் போய்த் தேற்றுங்கள்" என்று மன்றாடுகிறான். கடைசியாக அந்தத் தாய்மார்கள் எவ்வளவோ கஷ்டப்பட்டுப் பிரிந்த பின், ராமன் காட்டுக்குப் போவதற்காகத் தேர்மேல் ஏறப் போகிறான்.

இன்னும் ஓர் இடையூறு வசிஷ்டர் - வடிவத்தில் கண் எதிரே நிற்கிறது. உடனே அவன் பேசாமலே அவரைக் கை தொழுது வலம் வந்து, தம்பியையும் தேவியையும் தேரில் ஏறச் செய்து, தானும் ஏறிப்போகிறான்:

தன்ன லாருயிர்த்
தம்பியும், தாமரைப்
பொன்னும் தானும்ஓர்
தேர்மிசைப் போயினான்.

[தாமரைப் பொன் — மகா லட்சுமி, (இங்கே) சீதா லட்சுமி.]

ஒரு தேர், ஓர் உயிர், ஒரு மனம், ஒரே நோக்கம் — என்று சொல்லும்படி மூவரும் போகிறார்கள் வனத்தை நோக்கி.



சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.


166. ஒரே இரவு — உள்ளும் புறமும்

ஸூரியன் அஸ்தமித்து விட்டது. மோகனமான மாலை வெயில் அழிந்து செவ்வானம் தன் செம்மையும் அழகும் இழக்க அந்தி மயங்குகிறது— கூனி சூழ்ச்சியால் மயங்கித் திரிந்த கைகேயி மனம் போலே. இந்த இருவர் செயலால் ஒளியும் மலர்ச்சியும் இழந்து கண்ணீர் சிந்தும் பெண்குலம் போலத் தாமரை மலர்கள் முகம் குவிந்திருக்கின்றன.

மீன்புகழ் பெறவெயில்
　　ஒதுங்க, மேதியோ(டு)
ஆன்புகக், கதிரவன்
　　அத்தம் புக்கனன்

[மீன் — நட்சத்திரம். மேதி — எருமை. ஆன் — பசு. அத்தம் புக்கனன் — அஸ்தமித்தான்.]

சூரிய வெளிச்சத்திற்கு முன் இருந்த இடம் தெரியாமல் மழுங்கிக் கிடந்த நட்சத்திரங்கள் சூரியன் தன் கிரணங்களை ஒடுக்கிக் கொண்டு ஒதுங்கியதும், ஒளி வீசி முகம் காட்டுகின்றன—புருஷோத்தமனாகிய ராமன் ஒதுங்கப் புகழ் பெறுவோரைப் போலே. ஊருக்கு வெளியே மேய்ந்து கொண்டிருந்த பசுக்கள் எருமைகள் முதலிய பிராணிகளும் வயிறு நிறைய மேய்ந்துவிட்டு மெள்ள வருகின்றன நகரத்திற்குள்ளே. இப்படி இவை வந்து வீடுபுகும் வேளையில் சக்ரவர்த்தி மகன் காடு நோக்கிப் புறப்படுகிறான்.





சோலையில் நள்ளிரவு

அயோத்திமா நகரத்திலிருந்து இரண்டு யோசனை தூரம் போவதற்குள் நன்றாக இருட்டி விட்டது. சுமந்திரன் ஓட்டிக் கொண்டு போன இரதத்திலிருந்து ராமன் தேவியோடும் தம்பியோடும் இறங்கி, ஒரு சோலையில் தங்கி இரவைக் கழிக்க விரும்புகிறான். அவனைத் தொடர்ந்து வந்த ஜனத்திரள், ஒன்றும் சாப்பிடாமல் விம்மி விம்மி அழுது கொண்டே, சோலையை வட்ட வடிவமாகச் சூழ்ந்து கொண்டு, ஆற்றங்கரை, மணல் மேடு, புல்வார்தரை முதலிய இடங்களி லெல்லாம் படுத்துக் கிடக்கிறது.

நள்ளிரவு. வழி நடந்த இளைப்பினாலும் மனவருத்தத்தினாலும் சோர்ந்து போன மக்கள் இப்பொழுது மெய்ம்மறந்து உறங்குகிறார்கள். இவர்களில் இளம் பெண்கள் எத்தனை? பருவம் வந்த பெண்மணிகள் எத்தனை? கணவர்களோடு வந்த காதலிகள் எத்தனை? புருஷர்களையும் குழந்தைகளையும் மறந்தவர்கள் எத்தனை? குழந்தைகளுக்குப் பாலூட்-

டிக் கொண்டு உறங்கும் தாய்மார்கள் எத்தனை? செவிலித்தாயர் மடியிலே கண்வளரும் கன்னியர் எத்தனை? இப் பெருங் கூட்டத்தில் அயோத்தி வாசிகளும் உண்டு; அயலூர்களிலிருந்து வந்தவர்களும் உண்டு. இதோ சில பெண்மணிகள் குட்டிமான்களைப் போல் உறங்கிக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் தங்கள் ஆடையின் ஒரு பகுதியையே தலையணையாகக் கொண்டிருக்கிறார்கள். கதர் ஆடைதான்; ஆனால் எப்படிப்பட்ட — டக்கா மஸ்லினையும் பழித்த — அழகான மெல்லிய கதர்! பாருங்கள்:

ஆவிவிரி பால்நுரையின்
ஆடைஅணை யாக,
நாவிவிரி கூழைஇள
நவ்வியர் துயின்றார்.

[ஆவிவிரி பால் நுரை — ஆவி எழும்பும்படியாகப் பொங்கும் பால் நுரை. நுரையின் — நுரைபோலக் கொய்து வைத்த. அணை — தலையணை. நாவி — தைலத்திலுள்ள புனுகு மணம். விரி — விரிகிற; பாவுகிற. கூழை — கூந்தல். நவ்வியர் — மான்குட்டி போன்ற பெண்கள். துயின்றார் — உறங்கினர்.]

சில பெண்கள் மயிலினம் போலவும், சிலர் அன்னங்கள் வரிசை வரிசையாகக் கிடப்பது போலவும் கிடந்து உறங்குகிறார்கள். சிலர் கற்பாறைகளிலும் இலைகளிலும் தளிர்களிலும் அசந்து கிடக்கிறார்கள். சிலர் சண்பகச் சோலைகளில் வாடிக் கிடக்கும் பூங்கொடிகள் போலவும், சிலர் மணல் மேட்டிலிருந்து வளர்ந்த பவளக் கொடிகள் போலவும் காண்கிறார்கள்.

சம்பக நறும்பொழில்
இயல்,தருண வஞ்சிக்
கொம்(பு)அழ(கு)ஒ சிந்தன
எனச்சிலர் குழைந்தார்;
வம்பளவு கொங்கையொடு
வாலுகம் வளர்க்கும்
அம்பவள வல்லிகள்
எனச்சிலர் அயர்ந்தார்.

[சம்பக நறும் பொழில் — நறுமணமுள்ள சண்பகச் சோலை. இயல் — இயல்கின்ற; இயற்கையாக அமைந்திருக்கிற. தருண வஞ்சிக் கொம்பு — இளம் பூங்கொடி, அழகு ஒசிந்தன என — அழகு வதங்கிக் கிடப்பது போல. குழைந்தார் — சோர்ந்து கிடந்தார்கள். வம்பு அளவு — கச்சு அணிந்த. வாலுகம் — மணல்மேடு. அம்பவள வல்லி — அழகிய பவளக் கொடி. அயர்ந்தார் — மெய்ம்மறந்து கிடந்தார்கள்.]

நடுநிசியாகி விட்டதால் இப்படி எல்லாரும் அயர்ந்து கிடக்கிறார்கள். ஆனால் ராமன் உறங்கவில்லை. இவன், சாரதியும் மந்திரியுமாகிய சுமந்திரனை மெதுவாக 'வா' என்று அழைக்கிறான். அழைத்து, "அதோ அப்படி யெல்லாம் படுத்துக் கிடக்கும் ஆடவர் பெண்டிர் எல்லாரும் என்னிடம் அபார அன்பு உள்ளவர்களல்லவா? அதனால்தானே இப்படித் தொடர்ந்து வந்திருக்கிறார்கள்? அவர்களை எப்படியாவது ஊருக்குத் திருப்பி விட வேண்டாமா? அவர்களையும் காட்டுக்கு இழுத்துக்கொண்டு போவது பெருந் தவறல்லவா? ஆகவே நீ ஓர் உபாயம் செய்ய வேண்டும். அதாவது, இர

தத்தை உடனே திருப்பி ஓட்டிக்கொண்டு போக வேண்டும்; ஜனங்கள் விழித்தெழுந்ததும் தேர்ச்சுவடு கண்டு நான் நகரம் திரும்பியதாக நினைத்துத் தாமும் திரும்பிப் போய் விடுவார்கள்'' என்கிறான்.

ராமன் ஏதோ லகுவாய்ச் சொல்லி விடுகிறான். சுமந்திரனுக்கோ ஒன்றும் தோன்றவில்லை. இரதத்தைத் திருப்பிக்கொண்டு போய் எப்படித் தசரதன் முகத்தில் விழிப்பது என்று திணறுகிறான், தத்தளிக்கிறான்.

தென்புலக் கோமகன்
தூதில் செல்கெனோ?

[தென்புலக் கோமகன் — தென் திசையிலுள்ள யமன். செல்கெனோ — செல்லக் கடவேனோ.]

என்று கதறுகிறான்.

'நாற்றிசை மாந்தரும்
நகர மாக்களும்
தேற்றினர் கொணர்வர்உன்
சிறுவன் தன்னை' என்(று)
ஆற்றின அரசனை,
ஐய! வெய்யஎன்
கூற்றுறழ் சொல்லினால்
கொலைசெய் வேன்கொலோ?

[நாற்றிசை மாந்தர் — அயோத்திக்கு நாலு திசைகளிலிருந்தும் வந்திருந்த மக்கள். நகர மாக்கள் — நகரவாசிகளான மகாஜனங்கள். தேற்றினர் கொணர்வர் — தேற்றி அழைத்துக்கொண்டு வருவார்கள். வெய்ய — கொடிய. கூற்றுஉறழ் — எமனை ஒத்த. கொலை செய்வேன் கொலோ — கொலை செய்வேனோ.]

என்று புலம்புகிறான்.

ராமன் காட்டுக்குப் போய் விட்டான் என்ற கடுஞ் செய்தியைத் தெரிவிக்கும் தன்னைக் காட்டிலும் கடைசியாகக் கைகேயிதான் நல்லவள் போலும்!—என்று அலறுகிறான், ராமன் கால்களைக் கட்டிக்கொண்டு.

சுமந்திரனை ராமன் கைகளால் எடுத்துத் தழுவிக் கண்ணீர் துடைத்துச் சாந்தப்படுத்த முயல்கிறான். சுமந்திரனுக்கோ உள்ளும் புறமும் ஒரே கள்ளிரவு — யமன் போன்ற இரவு. இவனுடைய பயமும் இப்படியேதான் பலித்துவிடப் போகிறது!



சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

167. ராமனது வீர லட்சியம்

வீரத்தைப் பாராட்டாதவர் இல்லை. வீரரை வீரரும் விரும்புவர்; கோழையரும் வியப்பர். வீரரை யார் வியவாதார்? — அதாவது 'வீரரை வியந்து போற்றாதவர் யார்?'—என்று கவிஞன் கேட்கிறான். 'அரக்கரில் வீரர் மற்று யாரே?' என்று கம்பன் ராட்சஸ வீரத்தையும் வியக்கின்றான். ராவணன் இந்திரஜித்தன் ஆகியோரது வீரம் ராம லட்சுமணரது வீரத்துக்குச் சிறிதும் இளைத்துக் காண்பதில்லை, கம்ப சித்திரத்திலே. எனினும் ராம வீரத்துக்கும் ராட்சஸ வீரத்துக்கும் அடிப்படை - வேற்றுமை உண்டு.

இரு வேறு கொள்கைகள்

ராம வீரம் 'அறம் வளர்க்கும்' வீரம்; ராவண வீரம் 'முறை துறந்த' வீரம். 'அறம் வளர்க்கும் கண்ணாள'னாகக் கம்ப - ராமன் நம் கண்முன் வருகிறான். கம்ப - ராவணனோ ராட்சஸ சர்வாதிகாரி, அகில லோக பயங்கரனான சக்ரவர்த்தி. உலகமெல்லாம் ஓர் உயிராகக் கண்டு மக்கள் உள்ளங்களை அறநெறியிலே மகிழ்விக்கும் ராமனது வீர லட்சியம் வேறு; மன்னுயிர் புடைத்துத் தின்று, வழியல்லாத வழிகளில் ஓடிச் செல்லும் ராட்சஸ வீர லட்சியம் வேறு.



போர்முனையில் பயங்கரமான படைக்கலம் நெருப்பைக் கக்கிக் கொண்டு நெஞ்சுக்கு நேரே வருகிறது. எனினும் நெஞ்சு பட படவென்று பறையடிக்கவில்லை. வீரன் முன் வைத்த காலைப் பின் வாங்காது நின்று சாகசத் தொழில்கள் புரிகின்றான். எனினும், "இப்படிப்பட்ட வீரத்தை உண்மையான வீரம் அல்லது சூரத்தனமாக நான் மதிப்பதில்லை" என்று ராமன் சொல்லுகிறான். ஏன் ? போர் வெறியோடு உயிரை விடத் துணியும் வீரம், இரக்கமில்லாத அரக்கர்களிடத்திலும் காணப்படுகிற தல்லவா ?

இனி, ராமன் உயர்ந்த லட்சியமாக மதித்து ஒழுகும் வீரம்தான் எது ? போர் வெறி பெறாத சமாதான காலத்தில் உயிரை விட வேண்டிய அவசியம் ஏற்பட்டாலும், சிறிதும் மனங் கலங்காமல், தர்மத்தை ஒரு சிறிதும் கைவிடாமல் நிற்கக் கூடியவரே வீரர் என்பது ராமன் கொள்கை.

எப்படிப்பட்ட அபாய காலங்களிலும் தர்மத்தின் கொடியைக் கீழே எறிந்து விட்டு ஓடிப் போக மாட்டார்கள் தர்ம வீரர்கள், உண்மை வீரர்கள். இத்தகைய வீர லட்சியத்தோடு வாழும் ராமன், அறம் துறந்து முறை துறந்து வாழும் அரக்கர்களை, அவர்கள் எப்படிப்பட்ட வல்லமையுள்ள போர் வீரர்களாயினும், 'பேடிப் போர் வல்லரக்கர்' என்றுதான் மதிக்கின்றான். ராமனுடைய உயர்ந்த தர்ம வீரலட்சியத்திற்கு முன் ராவணாதி ராட்சஸர்களுடைய சூரத்தன மெல்லாம் பேடித்தனமாகவே காண்கின்றது.

சூரர் யார் ?

இனி இத்தகைய தன் வீரலட்சியத்தை ராமன் சுமந்திரனுக்கு ஞாபகப்படுத்துவதைக் கேளுங்கள் :

நிறப்பெரும் படைக்கலம்
நிறத்தின் நேருற,
மறப்பயன் விளைக்குறும்
வன்மை அன்றரோ,
இறப்பினும் திருஎலாம்
இழப்ப எய்தினும்
துறப்பிலர் அறம்எனல்
சூரர் ஆவதே !

[நிறப்பெரும் படைக்கலம் - ஒளி பொருந்திய சிறந்த ஆயுதம். நிறத்தின் நேர் உற - மார்பிற்கு நேராக வரவும். மறப்பயன் - வீரச் செயல் ; தைரிய சாகஸச் செயல்கள். விளைக்குறும் - மேன்மேலும் நடத்துகிற. வன்மை - வல்லமை. அன்று அரோ : அரோ, அசை. திரு எலாம் — புத்திர சம்பத்து உள்ளிட்ட செல்வங்கள் எல்லாம். இழப்ப எய்தினும் — இழக்க நேர்ந்தாலும். துறப்பிலர் அறம் — அறத்தைத் துறந்து விடாதவர். எனல் - என்று சொல்லும்படி இருத்தல்.]


தவம் எது ?

எவ்வளவு துன்பம் நேர்ந்தபோதிலும் அறத்தைக் கைவிடலாகாது என்று வற்புறுத்திய பின், தன்னைக் காட்டுக்கு அனுப்பியது சக்ரவர்த்திக்குத் தவம் என்கிறான் ராமன். அது எவ்வளவு கஷ்டமான காரியமாக இருந்த போதிலும் அப்படி உண்மையைக் காக்கும் தவத்தைக் காட்டிலும் அவர் வேறு தவம் செய்ய வேண்டியதில்லையாம்.

தன்னைக் காட்டுக்கு அனுப்பியது அவருக்குத் தவம் என்றால், அவர் சொல்லைக் காப்பது தனக்குத் தவம் என்கிறான். பரம ஞானியான வசிஷ்டர் மூலமாகத் தன் செய்தியைத் தந்தைக்குப் பக்குவமாக உணர்த்தி, அம்முனிவரைக் கொண்டே அவரைத் தேற்றும்படி வேண்டுகிறான். முடிவில், அரசர் துயரத்தைத் துடைத்துக் கொண்டே சுமந்திரன் எப்போதும் அவர் பக்கத்தில் இருக்க வேண்டுமென்று விரும்புகிறான். தர்மத்தைப் பற்றிய கவலையோடு சக்ரவர்த்தியைக் குறித்தும் கவலைதான் !

சீதை கவலை

பிறகு சீதை சுமந்திரனிடம் செய்தி சொல்கிறாள். சீதைக்கும் கவலை அதிகம்தான். ஆனால் அக் கவலை சக்ரவர்த்தியைக் குறித்தது மன்று, வனவாசத்தைக் குறித்ததுமன்று. இவள் கவலை முழுதும் தான் செல்வமாக வளர்த்து அரண்மனையிலே விட்டு வந்த மைனாவையும் கிளியையும் பற்றியதே:



அன்னவள் கூறுவாள் ;
'அரசற்(கு), அத்தையர்க்(கு)
என்னுடை வணக்கம்முன்
இயம்பி, யானுடைப்
பொன்னிறப் பூவையும்
கிளியும் போற்றுகென்(று)
உன்னும்என் தங்கையர்க்(கு)
உணர்த்து வாய் !'என்றாள்.

[அன்னவள் — அவள்; சீதை. அரசர்க்கு — அரசனுக்கு. அத்தையர் — மாமிமார்களாகிய கௌசலை முதலியவர்கள். முன் — முதலில். யானுடை — என் முழுச் செல்வமாகிய. பூவை — மைனா. போற்றுகென்று — போற்றுக என்று; பரிவோடு பாது காக்கவேண்டுமென்று. உன்னும் — என்னையே நினைத்துக் கொண்டிருக்கும். உணர்த்துவாய் — தெரிவிப்பாய்.]

சக்ரவர்த்திக்கும் மாமிமார்களுக்கும் தன் வணக்கத்தை அவசரமாகத் தெரிவித்து விட்டுச் சீதை, உடனே தன் தங்கைமாருக்கு, "நான் வளர்த்த அந்தப் பொன்னிற மைனாவையும் ஆசைக் கிளியையும் பத்திரமாகப் பார்த்துக் கொள்ளுங்கள்" என்று ஞாபகமாய்ச் செய்தி சொல்ல வேண்டுமென்று சுமந்திரனை வேண்டிக் கொள்கிறாள். இந்தச் செய்தியில், அரண்மனை வாசத்தையே எப்போதும் அனுபவித்து வனவாசம் இன்னதென்பதையே அறியாத சுகுமாரியின் கள்ளமற்ற பொன்னுள்ளத்தைப் பார்க்கிறோமல்லவா ?

சுமந்திரன் பார்க்கிறான் சீதையின் இந்த நிலையை. "அடடா, குழந்தையாக இருக்கிறாளே இவள்; காட்டுக்குப் போகிற கஷ்டத்தைக் கொஞ்சங்கூட உணர்ந்து கொள்ளவில்லையே !" என்று எண்ணிப் பார்த்ததும், சோகம் மீறி வாய்விட்டு அலறத் தொடங்குகிறான். உடனே ராமன் தடுத்தான் ; தடுக்கவும் நெஞ்சு பொருமி விம்முகிறான். சீதையின் கிளிக் கவலை பெருங் கவலையாகி விட்டது, இப்போது சுமந்திரனுக்கு !

கடைசியாக லட்சுமணன் சொல்லும் செய்தி எவ்வளவு கொடுமையாக இருக்கிறது பாருங்கள் ! "முதல் முதல் ராஜ்யத்தை ராமனுக்குக் கொடுத்துப் பிறகு வாக்குத் தவறி அதே ராஜ்யத்தை ஒரு பெண்ணுக்குக் ('கைகேயியைத்தான் குறிப்பிடுகிறான் !') கொடுத்தாரே, அந்தச் சத்திய சந்தரை மாட்சிமை தங்கிய மகாராஜாவாக மதித்துச் செய்தி சொல்லவும் வேண்டுமோ? அப்படி ஏதாவது சொல்ல வேண்டுமானால் சொல்லுகிறேன்" என்ற முன்னுரையோடு ஆரம்பமாகிறது லட்சுமணனது நிஷ்டூர வார்த்தை.

"காட்டிலே புதல்வன் பசி பொறுக்கமுடியாமல் காய்களைச் சாப்பிட்டுக்கொண்டிருக்க, தாம் சொஸ்தமாக அரண்மனையில் இருந்து வேளை தவறாமல் போஜனம் செய்து கொண்டே, பொய்யிலா மெய்யர் என்றும் பெயரெடுத்திருக்கும் மன்னர் பிரானிடம், தாங்கள் இன்னமும் வானுலகம் போய்ச் சேராமல் உயிரைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டிருக்கும் தங்களுடைய வலிமையை க்ஷேமமாகப் பாதுகாத்து வரச் சொல்வாய், சுமந்திரா!" என்று லட்சுமணன் சொல்லிவிட்டது, தர்ம வீர லட்சியத்திலே தன்னை முற்றும் இழந்துவிட்ட ராமனுள்ளத்தை எப்படிப் புண்படுத்தியிருக்க வேண்டும் !



சித்திர ராமாயணம்


பி. ஸ்ரீ.

168. இருளும் ஒளியும்

ராமன் தம்பியைக் கண்டித்த பின் சுமந்திரன் இரதத்தைப் பூட்டிக்கொண்டு அயோத்திக்குப் புறப்படுகிறான். புறப்படும்போது திரும்பிப் பார்க்கிறான், ராமனும் சீதையும் லட்சுமணனும் அந்த நட்ட நடு நிசியில் காட்டுக்குள்ளே போகும் காட்சியை:

தையல்தன் கற்பும், தன்
    தகவும், தம்பியும்,
மையறு கருணையும்,
    உணர்வும், வாய்மையும்,
செய்யகை வில்லுமே
    சேம மாகக்கொண்(டு),
    ஐயனும் போயினன்
அல்லின் நாப்பணே.

[தையல் — சீதை, தகவு — நல்லொழுக்கம். மையற — குற்றமற்ற. உணர்வு — (இங்கே) நல்லறிவு. வாய்மை — சத்தியம். செய்ய — செம்மையான. சேமம் — பாதுகாவல். ஐயன் — ராமன். அல்லின் நாப்பண் — இரவின் நடுவில்; நடு ராத்திரியில்.]



முதன் முதல் ராமன் போகும் அந்தக் காட்டிலே அவனுக்குப் பாது காவலாக அமையும் படைதானும், சீதையின் கற்பும் காதலும், — அதாவது சீதையின் அசையாத தீரமான மனநிலை. அடுத்தபடியாக, துணையாகும் படை ராமனுடைய உயர்ந்த லட்சியத்தில் ஒன்றி நிற்கும் ஆண்மைக் குணம். வேறு சக்தி வாய்ந்த படைக் கலங்கள் கருணை, அறிவு, சத்தியம். இந்த விசேஷமான படைகளுக்கிடையே ஸ்தூல சக்தி நிறைந்த தம்பியையும் பார்க்கிறோம். இத்தகைய ஆறு துணைகளோடு, ஏழாவது படை ஒன்றும் உண்டு என்பது சொல்லாமலே விளங்கும். அதுதான் கோதண்டம் என்ற வில். நேர்மையான நிலையிலே கொடியோரை நலிந்து நல்லோரைப் பாதுகாக்க உதவும் என்ற குறிப்பு, ‘செய்ய தன் வில்’ என்ற சொற்றொடரில் தொனிக்கிறது.

ராமன் இப்படி ஒரு பட்டாளத்துடன் போவது போன்ற காட்சி சூட்சுமமாகப் பார்க்கும் கவிஞனுக்கே புலனாகிறது. இது சுமந்திரனுக்குப் புலனாகவில்லை. அவன் திரும்பிப் பார்த்தபொழுது, அழகனாகிய ராமன் தம்பியோடும் தேவியோடும் அந்த நடுராத்திரியில், அந்த மையிருட்டில், ஓங்கி உயர்ந்த மூங்கில்கள் நிறைந்திருக்கும் ஒரு பயங்கரமான காட்டிலே அடிவைத்துப் போய்க்கொண்டிருக்கிறான். அக் காட்சி சுமந்திரன் மனத்திலே அழியாத ஒரு படக் காட்சியாகப் பதிந்து விடுகிறது. பாதி யிரவிலே நட்ட நடு நிசியில் கைகேயி செய்த சூழ்ச்சி, அப்படிப்பட்ட நிசி வேளையிலேயே ராமனைக் காட்டுக்குள் தூரத்தி விடுகிறது.

வானம் காட்டிய கைவிளக்கு

அந்த மூங்கிற் காட்டுக்குள்ளே மெள்ள மெள்ள நடந்து போகின்றார் மூவரும். அப்படி நடந்து போகிறவர்களை வழி மறிக்கிற மாதிரி இருக்கிறது இருட்டு. எனினும், அந்த இருட்டிலே ஒரு கை விளக்கு:

பொய்வினைக்(கு) உதவும் வாழ்க்கை
அரக்கரைப் பொருந்தி, அன்னார்
செய்வினைக்(கு) உதவும் நட்பால்
செல்பவர்த் தடுப்ப(து) ஏய்க்கும்
மைவிளக் கியதே அன்ன
வயங்(கு)இருள் துரக்க, வானம்
கைவிளக்(கு) எடுத்த தென்ன,
வந்தது கடவுள் - திங்கள்.

[பொய் வினைக்கு உதவும் வாழ்க்கை — பொய்த் தொழிலுக்கே அர்ப்பணம் செய்த வாழ்க்கை. அன்னார் — அந்த அரக்கர்கள். செய்வினை — செய்யும் தொழில்; வஞ்சகம் கொலை முதலிய பாவத் தொழில்கள். செல்பவர்த் தடுப்பது ஏய்க்கும்...இருள் — செல்லுகின்ற ராமன் முதலியோரைச் செல்ல வேண்டாமென்று தடை செய்வது போன்ற இருட்டு. மை விளக்கியதே அன்ன — மையைக் கொட்டி மெழுகி விளங்கச் செய்தது போன்ற. வயங்கு இருள்-கருநிறமாய்ப் பிரகாசிக்கும் இருட்டு. துரக்க — துரத்தும்படி. கடவுள்-திங்கள் — தெய்விகமான அருளோடு ஒளி செய்யும் சந்திரன்.]



இருட்டு என் வழி மறித்துத் தடுக்கிறது என்றால், அரக்கர்களுடைய பாவ காரியங்களுக்கெல்லாம் உதவி செய்யும் நட்பிரிமைதான் காரணமாயிருக்க வேண்டும் என்கிறான் கவிஞன். ராமனை அப்படியே போக விட்டு விட்டால், நடந்து போய் இருளின் நண்பர்களாகிய அரக்கர்களை அநம் செய்து விடுவானல்லவா? ஆகையால் தடுத்துப் பார்ப்போம் என்று தீர்மானித்து விட்டதுபோல் தடுக்கிறதாம் இருட்டு.

இந்த இருளின் சேஷ்டையைப் பார்த்துக்கொண்டிருந்த வானம் என்ன செய்கிறது? இருள் அரக்கர்களின் நண்பனாய் இருப்பது போல், வானவர்களின் இருப்பிடமாகிய வானம் தேவ காரியமான ராம காரியத்துக்கு உதவி செய்ய வேண்டுமல்லவா? ஆகவே கைவிளக்கு எடுத்து வழி காட்டுகிறதாம். அக் கைவிளக்கே சந்திரோதயம். என்ன அழகான, பொருத்தமான, கற்பனை பாருங்கள்!

ஒரு மற்போர்

ராமன் அப்படிக் காட்டிலே நடந்து போகும் அதே சமயத்தில் சூட்சும உலகில் ஒரு மல் யுத்தம். பாவத்திற்கும் தர்மத்திற்கும் தான். தர்மத்தைப் பாவம் கீழே தள்ளி விட்டது; முதுகுக்கு மண்காட்டி விட்டது! அந்தத் தோல்வியோடு விட்டுவிடாமல், நெஞ்சிலே, உயிர் நிலையான

ஹிருதய ஸ்தானத்திலே தன் முழுப் பாரத்துடன் அமுக்கிப் பாவம் தர்மத்தை வதஞ் செய்து விடப் பார்க்கிறது. இந் நிலையிலே தான், கைகேயி சூழ்ச்சி மூலமாக விதியானது ராமலட்சுமணர்களைத் தர்மத்தின் உதவிக்காக அனுப்பி வைக்கிறதாம்.

ராம லட்சுமணர்கள் அந்த இருட்டில் நடந்து வரும்போது வில்லை நாண் ஏற்றி டங்காரம் செய்து கொண்டே வருகிறார்களாம், வழியிலுள்ள துஷ்டப் பிராணிகள் விலகிப் போக வேண்டுமென்று. அந்த ஓசையினால் தனக்கு உதவி வருகிறதென்று தெரிந்து கொண்ட தருமம் — அதாவது, தரும தேவதை — தன் முகத்தை மெள்ளத் தூக்கி ராம லட்சுமணர்களை நோக்குகிறதாம். அத்தகைய தருமத்தின் எக்களிப்போடு பிரகாசிக்கும் வதனம் போலிருக்கிறதாம் அப்போது உதயஞ்செய்த சந்திரன்.

தருமத்தின் வதனம் என்னப்
பொலிந்தது தனிவெண் திங்கள்.

[தனி—ஒப்பற்ற. வெண்திங்கள்—வெண்ணிறமுள்ள சந்திரன்.]

வெண்ணிலவா, வெண்பஞ்சா ?

இந்த வெண்ணிலவின் தண்ணொளியிலே ராமன் முதலிய மூவரும் செல்லும் காட்சியைப் பாருங்கள் :

அஞ்சனக் குன்றம் அன்ன
அழகனும், அழகன் தன்னை
எஞ்சலில் பொன்போர்த்(து) அன்ன
இளவலும், இந்து என்பான்
வெஞ்சிலைப் புருவத் தாள்தன்
மெல்லடிக்(கு) ஏற்ப வெண்ணூல்-
பஞ்சிடைப் படுத்த தென்ன,
வெண்ணிலாப் பரப்பப், போனார்.

[அஞ்சனக் குன்றம் அன்ன—நீல மலை போலிருந்த. எஞ்சலில்—குறைதல் இல்லாத; மாற்று உயர்ந்த. போர்த்து அன்ன—போர்த்து வைத்தது போன்ற. இளவல்—இளையவனான லட்சுமணன். இந்து—சந்திரன். வெஞ்சிலைப் புருவத்தாள்—விரும்பத்தக்க வில்லை ஒத்த புருவத்தோடு கூடிய சீதை. இடைப்படுத்தது என்ன—அக் காட்டினிடத்தே பரப்பியதை ஒப்ப.]

ராமனும் லட்சுமணனும் இப்போது சௌகரியமாக நடக்கிறார்கள். ஆனால் சீதையின் மெல்லிய அடிகளுக்குக் காட்டுப் பாதை கஷ்டம்தானே? 'இதை அறிந்துதான் சந்திரன் வெண் பஞ்சைப் பரப்புகிறானோ?' என்று சொல்லும்படி யிருக்கிறது மரங்களினிடையே வந்து தரையில் விழுகின்ற சந்திரிகை. கம்பன் காலத் தமிழ் நாட்டிலே நூல் நூற்கும் வெண் பஞ்சு—'ஆவி விரி பால் நுரையின் ஆடை' தரும் பஞ்சு — வெண்ணிலவு போலிருக்கிறதாம்.

* * * *

இவ்விதமாக நிலவில் நடந்து இவர்கள் தென் திசையாகச் செல்லும் போது, சுமந்திரன் வடக்கு நோக்கி இரதத்தில் போய்க் கொண்டிருக்கிறான்.



சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

169. கொன்றே தீர்த்தான்!

ஊரை நோக்கிய குதிரைகள் வெகு விரைவாக ஓடுகின்றன.. ஆனால், சுமந்திரனுடைய மனம் ஆவலுடன் அயோத்தியை நோக்கவில்லை. ராமனையே நினைத்துக் கொண்டிருந்ததால், தான் தேரில் போனதாகவே தெரியவில்லை சுமந்திரனுக்கு.

அருவியாய் கண்ணும் புண்ணாய்
அழிகின்ற மனமும் தானும்—

அப்படித் தேரிலே போய்க்கொண்டிருக்கையில் அயோத்திமா நகரின் கோட்டை மதில் கண்ணெதிரே வந்துவிடுகிறது, ஐந்து அல்லது ஆறு நாழிகை நேரத்திற்குள்.

ஞானியின் ஏக்கம்

ராமன் விரும்பியபடியே சுமந்திரன் வசிஷ்ட முனிவர் மூலமாகத் தசரதருக்கு ஆறுதல் அளிக்க விரும்புகிறான். ஆகவே நேராக முனிவரிடம் போய் அவரைத் தொழுது விவரமாகச் செய்தி சொல்லுகிறான். அந்தத் தத்துவ ஞானிக்கோ தசரதருக்கு ஆறுதல் கூறமுடியும் என்ற நம்பிக்கை கூட ஏற்படவில்லை. உள்ளத்திலே துன்பம் பொங்க, 'அந்தோ! முடிந்தான் அரசன்!' என்று பெருமூச்சு விடுகிறார்:



3—233

கடிகையோர் இரண்டு மூன்றில்
கடிமதில் அயோத்தி கண்டான்;
அடியிணை தொழுதான் ஆதி
முனிவனை; அவனும் உற்ற
படியெலாம் கேட்டு நெஞ்சில்
பருவரல் உழந்தான்; முன்னே
முடிவெலாம் உணர்ந்தான், "அந்தோ!
முடிந்தனன் மன்னன்" என்றான்.

[கடிகை — நாழிகை. கடிமதில் — காவலாக அமைந்த மதில். ஆதி முனிவன் — வயது முதிர்ந்தவனும் குல குருவாய்ச் சிறந்தவனு மாகிய முனிவன். பருவரல் உழந்தான் — துன்பத்தால் மிகவும் வருந்தினான். முடிந்தனன் - இறந்து விட்டான்.]

முனிவர் அடுத்த நிமிஷத்தில் தசரதரது பெருங் குணத்தை வியந்து, "ஐயோ! பழி வந்து விடும் என்று பயந்தல்லவா அரசன் ராமனைத் தடுக்க வில்லை?" என்று தமக்குள் தாமே சொல்லிக்கொள்கிறார். பிறகு ராமனுடைய நிலையை நினைத்துக்கொண்டு, "நான் தடுத்துப் பார்த்தேனே; நான் சொன்னதைக் கொஞ்சமும் ஒப்புக்கொள்ள வில்லையே!" என்று ஒரு சமயம் வருந்துவார். உடனே 'அவன் செய்ததுதான் சரி; அவன்தான் தர்மத்திற்கு உறுதியாக நிற்பவன்!' என்று சிஷ்யனை வியந்து தம்மைத் தாமே சமாதானப் படுத்திக்கொள்ள முயல்வார்.

நினைத்ததென்ன?
கண்டதென்ன?

எனினும் வசிஷ்டர் உள்ளம் சமாதானம் அடையவே யில்லை. 'விதியை



யாரால் வெல்ல முடியும்?' என்று விம்மிக்கொண்டே முனிவர் சுமந்திரனுடன் ராஜ மாளிகைக்குப் போகிறார். அங்கே என்ன காட்சியைப் பார்க்கிறார்கள்? பக்கத்தில் இருந்தவர்களெல்லாம் இப்போது விரைந்து வந்து தசரதர் படுக்கையைச் சுற்றி நிற்கிறார்கள். "ரதம் வந்து விட்டது! ஆம், தேரில் எதிர்கொண்டு ராமன் திரும்பி வந்து விட்டான்; தகப்பனாரை இதோ பார்க்க வந்து விடுவான்! அப்போது நாமும் அவனைக் கண்டு களிக்கலாம்" என்று உத்ஸாகமாக எண்ணி நிற்கிறார்கள்.

ஆனால் அது என்ன? தாரை தாரையாகக் கண்ணீர் பெருக்கிக் கொண்டு வருகிறானே சுமந்திரன்! கண்டவர்கள் நிலை கலங்கிப் போகிறார்கள்; அப்படி அப்படியே உணர்வற்றவர்களாய் நின்று விடுகிறார்கள்:

கார்கொண்ட மேனி யானைக்
கண்டிலர்; கண்ணில் வற்று
நீர்கொண்ட நெடுந்தேர்ப் பாகன்
நிலைகண்டே, நிலையில் தீர்ந்தார்!

[கார் கொண்ட மேனியானை — நீலமேகம் போன்ற ராமனை. கண்டிலர் - காணாதவர்களாய். நெடுந்தேர்ப் பாகன் - பெரிய தேரை ஓட்டும் சுமந்திரன்.]

இதைக் கண்ட சுமந்திரன் வசிஷ்டரை முன்னே விட்டுத் தான் பின்னே நின்று கொள்கிறான். இப்பொழுது அங்குள்ள எல்லாரும் "ரதம் வந்து சேர்ந்தது; ரதம் வந்து விட்டது!" என்று தசரதரை நோக்கிச் சொல்கிறார்கள். கண் திறவாது மயக்கத்திலிருந்த தசரதர் பளிச்சென்று தம் கண்களை விழித்துப் பார்க்கிறார். 'ரதம் வந்தது!' என்ற வார்த்தை ஓர் அதிசய மந்திரம்போல் வேலை செய்தது. 'ராமன் வந்து சேர்ந்தான்!' என்றே அர்த்தம் பண்ணிக் கொள்கிறார் தசரதரும். ஆசா பரவசத்தால் தூண்டப்பெறும் நம்பிக்கைக்குத்தான் எவ்வளவு சக்தி!



ஞானத்தின் தோல்வி!

மயக்கம் தீர்ந்து கண்களை மலர விழித்துக்கொண்ட சக்ரவர்த்தி இப்பொழுது தம் எதிரே வசிஷ்ட முனிவரைப் பார்க்கிறார். பார்த்து, "வீரன் வந்தானோ?" என்று ஆத்திரமாய்க் கேட்கிறார். இது கேட்ட வசிஷ்டர் மறுமொழி சொல்ல முடியாமல் ஏங்கி நிற்கிறார்.

அந்த நிலையும், முனிவர் முகத்தைப் பார்த்து அரசர் சோர்வு அடைவதும், அரசன் நிலைகண்டு பொறுக்க முடியாமல் முனிவர் அப்பால் போய் விடுவதும் எவ்வளவு இயற்கையாகச் சித்திரிக்கப்படுகின்றன:

'இல்லை'என்(று) உரைக்க லாற்றான்,
ஏங்கினன் முனிவன் நின்றான்;
வல்லவன் முகமே 'நம்பி
வந்திலன்' என்னும் மாற்றம்
சொல்லலும், அரசன் சோர்ந்தான்;
துயர்உறு முனிவன், 'நான்இவ்
அல்லல்காண் கில்லேன்!' என்னா,
ஆங்குநின்(று) அகலப் போனான்.

[உரைக்கலாற்றான் – உரைக்க முடியாதவனாய். வல்லவன் – (இங்கே) வசிஷ்டர். நம்பி – ராமன். மாற்றம் – செய்தி. துயர்உறு – துயரம் மிக்கவனான. அல்லல் – கஷ்டம். காண்கில்லேன் – காணமாட்டேன். என்னா – என்று சொல்லி. அகலப் போனான் – அப்பாற்போனான்.]

தந்தைக்கு முதன் முதல் வசிஷ்டரே ஆறுதல் சொல்லக் கூடும் என்று ராமன் நம்பினான். ஆனால் அந்தப் பெருந் துயரத்தின் முன் அந்த மகரிஷியால் நிற்க முடியவில்லை. உணர்ச்சி–வெள்ளம் வேதாந்த ஞானத்தையும் அடித்துக் கொண்டு போய் விடுகிறது.

துயரம் தீர்ந்தது!

சக்ரவர்த்தியின் துயரத்தைப் பார்க்க முடியாமல் வசிஷ்டர் அப்பால் போனதும், தசரதர் சுமந்திரனைப் பார்க்கிறார். அவன் இப்பொழுது கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, முகத்திலும் துயரத்தை அதிகமாய்க் காட்டிக் கொள்ளாமல் தான் நிற்கிறான். தசரதருக்கு மீண்டும் சிறிதளவு நம்பிக்கை பிறக்கிறது. ராமன் இப்பொழுது வந்து சேரவில்லை என்று எண்ணிய போதிலும், தம் அருமை மகன் தம்மை நோக்கி வந்து கொண்டிருப்பதாகவே சக்ரவர்த்தி நம்புகிறார். எனவே இவர் சுமந்திரனை நோக்கி, "ராமன் தூரத்தில் வருகிறானா, சமீபத்தில் வருகிறானா?" என்று கேட்கிறார்.

உடனே சுமந்திரன் தன்னை அறியாமலே தன் மனத்தில் ஆழ்ந்து பதிந்திருந்த அந்த வனப் பிரவேசக் காட்சியை அப்படியே வெளியிடுகிறான்.

வெய்உயர் கானம், தானும்
தம்பியும் மிதிலைப் பொன்னும்
போயினன் என்றான்; என்ற
போழ்தத்தே ஆவி போனான்!

[வெய் — மூங்கில்கள். மிதிலைப்பொன் — சீதை., போழ்தத்தே – போதே, பொழுதே.]

மூங்கில்கள் ஓங்கி அடர்ந்து வளர்ந்திருக்கும் அக்காட்டிலே ராமன் தம்பியோடும் ஆருயிர்த் தேவியோடும் போனான் என்று சுமந்திரன் சொல்லும் போதே ஆவிபோய் விடுகிறது தசரதருக்கு!

"யமதூதனைப்போல் போவேனா? என் சொல்லால் கொலை செய்யப் போகிறேனா?" என்றெல்லாம் பரிதவித்துக் கொண்டிருந்த சுமந்திரன் கடைசியாகத் தசரதருக்கு யமனாகவே வந்து சேர்ந்தான்!



சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

170. மூன்று காட்சிகள்

தசரதன் இறந்தது கண்டு மூர்ச்சை அடைந்த கோசலை உணர்வு பூண்டதும் பலவிதமாகப் புலம்பினாள். சுமித்திரையும் உயிர் சோர்ந்த நிலையில் கிடந்தாள். சுமந்திரன் போய்ச் செய்தி சொல்ல,

வேத முனிவன், விதிசெய்த
வினையை நோக்கி விம்முவான்.


[வேத முனிவன் - வசிஷ்டன்.]

ஈமக்கிரியை நடத்த நாலு பிள்ளைகள் இருந்தும் சமயத்திற்கு உதவ ஒருவரும் இல்லையே என்று வருந்தும் வசிஷ்டர், பரதன் கேகய நாட்டிலிருந்து திரும்பி வந்ததும் கிரியைகளை முடித்துக் கொள்ளலாம் என்று சொன்னார். அதுவரை தசரதனுடைய உடம்பைத் தைலத் தொட்டியில் போட்டு வைக்கிறார்கள் :

தையல் கடல்நின்(று) எடுத்(து)அவனைத்
தயிலக் கடலின் தலைஉய்த்தார்.

[தையல்-கடல்–பெண்களின் கடல் போன்ற கூட்டம். தயிலக் கடல்–கடல்போல் மிக்க தைலம். கடலின் தலை – கடலில். உய்த்தார் – கொண்டு போட்டார்கள்.]

உயிர் நீங்கிய தசரதர் உடம்பைச் சூழ்ந்து மொய்த்துப் புலம்பிக்கொண்டிருந்தார்கள் எண்ணிறந்த அரண்மனைப் பெண்கள். அவர்களை விட்டு அவ் வுடம்பை எடுத்து அது கெட்டுப் போகாமல் இருப்பதற்காகத் தைலத் தொட்



டிக்குக் கொண்டுபோவது பெரும் பிரயத்தனமாகி விட்டதாம்.



* * *

இனி இச்சோக மயமான அரண்மனையை விட்டு வேறொரு இடத்திற்குப் போவோம். இப்போது ராமனைத் தொடர்ந்து போக வேண்டியதில்லை; அவனைத் தொடர்ந்துபோன அயோத்தி மக்கள் சோலையிலும் ஆற்றங்கரையிலும் மணல் மேடுகளிலும் சோர்ந்து கிடந்து உறங்கிப் போனார்களே, அந்த இடத்திற்குத்தான் போக வேண்டும்.

பொழுது விடிவதற்குள் தசரதர் மரணம் நேர்ந்துவிட்டது. அரண்மனையெங்கும், தலை நகரமெங்கும் ஒரே சோகம் - ஒரே அழுகை. எனினும் வழக்கம்போல சூரியன் உதிக்கத்தான் செய்கிறான் மிக்க ஒளியுடன். சக்ரவர்த்திக்கு உரிய ஆடம்பரத்துடன், சின்னங்களுடன் சுடர்மயமான தேரில் தோன்றுகிறானும் :

மீனார் வேலை முர(சு)இயம்ப,
　　விண்ணோர் ஏத்த, மண் இறைஞ்சத்,
தூநீர் ஒளிவாள் புடையிலங்கச்,
　　சுடர்த்தேர் ஏறித் தோன்றினன் :
'வானே புக்கான் அரும்புதல்வன் ;
　　மக்கள் அகன்றார் : வரும்அளவும்
யானே காப்பன் இவ்வுலகை!'
　　என்பான் போல, எறிகதிரோன்!

[மீன் ஆர் வேலை — மீன்கள் நிறைந்த சமுத்திரம். முரசு இயம்ப — முரசுபோல் ஒலிக்கவும். இறைஞ்ச — வணங்க. தூநீர் ஒளிவாள் — தூய தன்மையுடைய ஒளியாகிய வாள் ; மாசுமறு அற்றுப் பிரகாசிக்கும் கிரணங்கள். வாள் — கிரணங்களாகிய வாள். புடை — பக்கத்திலே. இலங்க — விளங்க. சுடர்த் தேர் — சுடர்மயமான தேர். வானே புக்கான் அரும் புதல்வன் — சூர்ய குலத்தில் பிறந்த புதல்வனாகிய தசரதன் வானுலகம்



போய் விட்டான்.
மக்கள் அகன்றார்
— பிள்ளைகளும்
போய் விட்டார்கள் வேறு இடங்களுக்கு. எறி கதிரோன் — கிரணங்களை வீசுகிற சூரியன்.]

முரசு முழங்கத் தேரில் வருகிறான், கிரணங்களாகிய வாளாயுதங்களுடன். விண்ணும் மண்ணும் துதி செய்ய வருகிறான். ஏன் இப்படி வந்து தோன்றுகிறான்? "நாடு அராஜகமாக இருக்கலாகாது, நான் பார்த்துக் கொள்கிறேன் ராஜ்யத்தை!" என்ற எண்ணத்துடன் வருவது போல உதயஞ் செய்கிறானாம் சூரியன்.

இப்படிச் சூரியன் உதித்தெழுந்ததும் சோலை முதலிய இடங்களில் படுத்திருந்த ஆண் பெண் எல்லாரும் விழித்தெழுந்தார்கள். ராமனும் அங்கே இருக்கிறான் என்றுதான் எண்ணம். எழுந்தவர்கள் ராமனைப் பார்க்கப் போனார்கள். அவன் தென்படவில்லை, ஒரே திகைப்பு, தவிப்பு; திடீரென்று ஒரு துணிவு. எட்டுத் திசையுமே ஓடிப் பார்ப்போம் என்று எழுகிறார்கள், உடனே விழுகிறார்கள், — தத்தளித்த மனம் ஓடிப்போக உதவி செய்யாததால்.

இந்நிலையில் அவர்கள் எப்படி யெல்லாம் கதறுகிறார்கள், அலறுகிறார்கள்?

எட்டுத் திசையும் ஓடுவான்
எழுவார்; விழுவார்; ‘இடர்க்கடலுள்
விட்டு நீத்தான் நமை’என்பார்;
‘வெய்ய, ஐயன் வினை’என்பார்;
‘ஓட்டிப் படர்ந்த தண்டகம்இவ்
வுலகத்(து) உளதன் றே?உணர்வைச்
சுட்டிச் சேர்தல் ஆற்றுதுமேல்,
தொடர்தும் தேரின் சுவ(டு)’என்பார்.

[ஓடுவான் - ஓடும் பொருட்டு. நீத்தான் - நீங்கி விட்டான். நமை- நம்மை. வெய்ய - மிகக் கொடிது. ஐயன் வினை - ராமன் செயல். தண்டகம் — தண்டக வனம் என்ற காடு. உணர்வைச் சுட்டிச் சேர்தல் ஆற்றுது மேல் - அறிவைக் கலங்கவிடாமல் சிறிது ஒழுங்கு செய்வோமானால்.]

துயரக் கடலில் தங்களை அமிழ்த்திவிட்டுப் போய்விட்ட ராமனுடைய செயல் மிகக் கொடிது என்று கதறுகிறார்கள், அலறுகிறார்கள். பிறகு, “தேரின் சுவட்டைத் தொடர்ந்து போவோம்; ராமனை நிச்சயமாய்க் கண்டு கொள்ளலாம்” என்று அங்கு மிங்கும் நோக்குகிறார்கள்.

அயோத்தியை நோக்கித் திரும்பிய தேர்ச் சக்கரத்தின் தடத்தை ஓட்டிப் போனார்கள். அப்போதுதான் அவர்களுக்கெல்லாம் நம்பிக்கை வந்தது, உயிர் வந்தது! “யாரும் அஞ்ச வேண்டியதில்லை; ஐயன் போய் அயோத்தி அடைந்தான்!” என்று உவகையோடும் வேகத்தோடும் ராஜ தானிக்குத் திரும்ப வந்து விட்டார்கள்.

திரும்பியவர்கள் நகரம் புகுந்ததும், “அரசன் போய்விட்டான் விண்ணுலகம்” என்ற செய்தி கேட்டார்கள். ராமன் காட்டுக்குப் போய்விட்டான் என்றும் தெரிந்து கொண்டார்கள்.

இனி, கங்கைக் கரையை நோக்கிச் செல்லும் ராமனைத் தொடர்ந்து செல்வோம். ராமன் முதலிய மூவரும் காலை வெயிலில் நடந்து போகிறார்கள், — அந்த ஆனந்தமான ஒளியையும் காலை இளங்காற்றையும் அனுபவித்துக்கொண்டு. ஒளியோடு இனிமையும் அழகும் எப்படிக் கலந்து காட்சி அளிக்கின்றன:

வெய்யோன்ஒளி தன்மேனியின்
விரிசோதியின் மறையப்
பொய்யோஎனும் இடையாளொடும்
இளையானொடும் போனான்,
மையோ?மர கதமோ?மறி
கடலோ?மழை முகிலோ?
ஐயோ! இவன் வடிவென்பதோர்
அழியாஅழ(கு) உடையான்.

[வெய்யோன் — சூரியன்; சிறிது வெப்பமாக முதிரும் கிரணங்களை வீசும் இளஞ்சூரியன். விரி சோதியின் — விரிந்து பரவுகின்ற பேரொளி. மையோ — அஞ்சனமோ. மறிகடலோ — அலை மடங்கி விழும் கடலோ.]

அந்தப் பசுஞ்சுடர்ச் சோலையின் இடைவெளி வழியாக, அந்தக் காலை இளங்கதிர்கள் ராமனது மேனியில் வந்து விழுகின்றன. இந்தப் பேரொளி யழகில் அந்தக் கதிரொளியும் மங்கி மறைந்து விடுகிறதென்று தோன்றுகிறது. இதை ஜோதி யென்றும், அதை ஒளி என்றும் கூறுவதைப் பாருங்கள். இத்தகைய பேரழகை இன்னும் சிறிது உற்று நோக்குவோம்.